# சிவில் சமூக நிதி 2008 க்கான விண்ணப்பங்களை உலக வங்கி கோருகிறது

**கொழும்பு, ஜனவரி 02, 2008:** முன், சிறு நன்கொடைத்திட்டம் என அழைக்கப்பட்ட சிவில் சமூக நிதி (CSF) 2008 க்கான விண்ணப்பங்களை உலக வங்கியின் கொழும்பு அலுவலகம் இலங்கையிலுள்ள சமூக அமைப்புகளிடமிருந்து கோருகிறது.

சிவில் சமூக நிதி 2008 (CSF2008) யின் குறிக்கோள் அபிவிருத்திக்கான ஒருமைப்பாடு **(Reconciliation for Development)** ஆகும். நிலையான சமாதானத்தை தரவல்ல சக வாழ்வை மீண்டும் கட்டி எழுப்பக் கூடிய நடைமுறைச்சாத்தியமான திட்டங்களை செயற்படுத்துபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

ஒவ்வொன்றும் US$ 5000 (ஏறத்தாழ Rs. 500,000) பெறுமதியான ஏழு நன்கொடைகள் 2008 ல் வழங்கப்படும். விண்ணப்பதாரி இத் தொகையை ஒரு வருட காலத்திற்குள் பூர்த்தி செய்யக்கூடிய செயற்திட்டங்களை அமைத்து செயற்பட வேண்டும்.

போரினால் இலங்கையின் அபிவிருத்தி பலவீனமடைவதோடு அந்நாட்டிலுள்ள முழு அளவிலான திறமையையும் அடைய முடியாமல் போய்விடுகிறது. நிலையான சமாதான வாழ்வுக்கான சூழலை ஏற்படுத்தக்கூடிய சமூகங்களிடையே காத்திரமான உறவுகளை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தையை தரவல்ல புதுவகையான வழிமுறைத் திட்டங்களுக்கு இந்நிதி வழங்கப்படும்.

முரண்பாடு அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட விடயங்களில் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படும் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட சமூக அமைப்புக்கள் இந்நிதிக்கு விண்ணப்பிக்க தகுதி பெறுகிறார்கள் இவை சமூகத்தில் நற் பெயர் மற்றும் நிதி வளமுள்ள அமைப்புகளாக இருத்தல் வேண்டும். இந்நிகழ்ச்சி ஒவ்வொரு அமைப்பிலிருந்தும் ஒரு விண்ணப்பத்திற்கு என வரையறை செய்யப்பட்டுள்ளது.

சிவில் சமூக நிதிக்கான விண்ணப்பங்கள் மற்றும் “திட்டங்கள் வரைவதற்கான வழிமுறைகள்” எனும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழி மூலமான சிறிய புத்தகத்தை உலகவங்கியின் கொழும்பு அலுவலகம் 73/5, காலி வீதி கொழும்பு 03 எனும் விலாசத்திலுள்ள வரவேற்பு பீடத்திலும் எங்கள் இணையத்தளம் www.worldbank.lk இலும் பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் மூலமாகவோ அல்லது மின் அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள மேலே குறிப்பிட்ட விலாசத்தில் திருமதி கெரிமா திலகசேனவை தொடர்பு கொள்ளலாம், அல்லது மின் அஞ்சல்-kthilakasena@worldbank.org மூலமாகவோ தொலைபேசி இல. 5561318 மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். அல்லது டிலினிகா பீரிஸ் அவர்களை dpeiris@worldbank.org மூலமாகவோ தொலைபேசி இல. 5561325 மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

**விண்ணப்பங்கள் - சமர்பிப்பதற்கான இறுதி திகதி பெப்ரவரி 11, 2008 இணையத்தளம் www.worldbank.lk ஊடாக CSO இன் மேலதிக தகவல்களை அறிந்துக்கொள்ளலாம்.**

சிவில் சமூக நிதி
உலக வங்கி 2008

## சிவில் சமூக அமைப்புகளுக்கான வழிகாட்டல் நிபந்தனைகள்

### திட்டத்தைப்பற்றி

உலகவங்கியின் இலங்கை அலுவலகத்திற்கூடாக நிர்வகிக்கப்படும் சிறிய நன்கொடையானது சிவில் சமூகம் சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு சிவில் சமூக நிதி (CSF) உதவும்.

அபிவிருத்தி விளைவுகளை அதிகரிக்கும் மற்றும் அவற்றில் தாக்கத்தை வெளிப்படுத்தும் விடயங்களில் மக்களை ஈடுபடுத்தும் திட்டங்களுக்கு சிவில் சமூக நிதி உதவும். பங்குபற்றுதல், பொறுப்புடமை (Accountability) உட்படுத்தல் போன்ற விடயங்கள் இதனால் பலமடையும். இவ்விடயங்கள் பொதுத்துறை, மற்றைய சிவில் சமூக அமைப்புக்கள், தனியார் துறை போன்றவற்றுடன் கூட்டுச்சேர்வதையும் பலமடையச் செய்யும்.

பெட்டி 01, சிவில் திட்டத்தின் விளைவு

சிவில் வேலைத்திட்டமென்பது.............

- **பொதுமக்களுக்கிடையிலான ஒருமைப்பாடு, மற்றும் உள்ளூர் உரித்துருமைகளில்** சீர்திருத்தங்களை ஏற்படுத்தி அதனால் தேசிய வறுமைக் குறைப்பு, அபிவிருத்தி திட்டங்களை கீழ்வருவனவற்றால் எற்படுத்தல் - அறிவு பகிர்ந்தளித்தல், புரிந்துணர்வக்கான பொது நிலைப்பாட்டை கட்டி எழுப்புதல், பொது – தனிப்பட்ட துறைகளின் இணைந்த செயற்பாட்டை ஊக்குவித்தல், சிலவேளை நெருக்கடிகளைத் தீர்த்துவைத்தல்.

- **கீழ்நிலை மற்றம் இரண்டாம் நிலை பங்குதாரிகள் குறிப்பாக வறுமை மற்றும் ஒதுக்கப்பட்ட மக்களின்** விடயங்களில் அக்கரை காட்டுதல் அத்துடன் அவர்களின் எண்ணங்களை கொள்கை மற்றும் திட்டம் சம்பந்தமாக முடிவுகளை எட்டுவதில் உள்ளடக்கப்பட உதவுதல்.

- உள்ளூர் அறிவுத்திறனை வழங்குவதன் மூலம் அபிவிருத்தி திட்டங்களை பலப்படுத்தலும், leverage விளைவும், எழக் கூடிய விபரீதங்களை அடையாளம் காணுதல், உதவியளித்தல் மற்றும் அடைவு மட்டத்தை விரிவுப்படுத்தல் போன்றவற்றை முக்கியமாக சமூக மட்டத்தில் அளித்தல்.

- **உள்ளூர் மற்றும் உலக மட்டத்தில் அபிவிருத்தி திட்டங்களுக்கு புதுமையான யோசனை, தீர்வு** என்பவற்றைக் கொண்டுவருதல்.

- **வெளிப்படைத்தன்மை மற்றம் பொறுப்புணர்ச்சி** போன்றவற்றை அபிவிருத்தி விடயங்களில் உயர்வடையச் செய்து திறமையான ஆளுமைக்கான சூழலை உருவாக்குதல்.

### விண்ணப்பிப்பதற்கு முன்

கிடைக்கப்பெறும் ஒரு மிகவும் சிறிய வீத வேண்டுகோள்களைத்தான் உலகவங்கியின் சிறிய நன்கொடைத் திட்டத்தால் நிதி அளிக்கமுடிகிறது. பல வேண்டுகோள்கள் நிராகரிக்கப்படுவதற்கு காரணம் அவை தகுதி குறைவானவை, என்பதல்ல ஆனால் அவை நிகழ்கால குறிக்கோள்களை அடைவதற்கு பொருத்தமற்றவை, அல்லது சிவில் சமூக நிதியத்தின் குறிக்கோளை எட்டுவதற்காள திட்டங்களை அவை தெரிவு செய்யவில்லை. உங்களுடைய நடவடிக்கை,

குறிக்கோள், எண்ணக்கரு போன்றவற்றுக்குள் அடங்கலாம், இருந்தும் வேண்டுகோள் கிடைக்கப்பெறும் நிதியைவிட அதிகமானதாகும்.

விண்ணப்பிப்தற்கு முன், வழிகாட்டல் நிபந்தனைகளை வாசித்து அவை உங்கள் திட்டத்தோடு பொருந்துகிறதா என தீர்மானியுங்கள்.

## யார் விண்ணப்பிக்க முடியும்?

- இலங்கையில் அமைந்துள்ள அபிவிருத்தி விடயங்களில் பணிபுரியும் சிவில் சமூக அமைப்புக்கள் இந்த நன்கொடை நிதிக்கு விண்ணப்பிக்கமுடியும்.
- சிவில் சமூக தாபனங்கள் நல்ல நிலையிலும், சமூகத்தில் திறமையான சாதனை படைத்தலும் மற்றும் நிதிவளமுள்ளதாகவும் இருக்க வேண்டும்.
- கடந்த வருடங்களில் உதவி பெறாத தாபனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (ஒருதாபனம் ஐந்து வருட காலத்தினுள் மூன்று தடவைக்கு மேலாக சிவில் சமூக நிதி பெற தகுதியற்றது)

## எப்படியான விடங்களுக்கு உதவி வழங்கப்படும்?

**குடியியல் விவகாரங்கள்** போன்றவற்றிற்கு உதவுவதே இவ் சிவில் சமூக நிதியின் **அடிப்படை நோக்கமாகும். மேலும்,**

- குடியியல் விவகார அறிவு திறனை உயர்த்துவதற்கு கருத்தரங்கு மற்றும் பட்டறைக்கு மட்டும் வரையறை செய்யப்படாது, ஆனால் அவற்றை உள்ளடக்கிய நிகழ்ச்சிகளாக இருக்கலாம். கொள்கை ஆக்கம் அல்லது பொது சேவை அளித்தல் அல்லது ஒரு குறித்த துறையின் திறனை கட்டியமைக்கும் புதுவித முயற்சிகளை ஏற்படுத்தக்கூடிய பொருத்தமான தொடர்பாடலை உள்ளடக்கியதாகவும் அவை அமைய வேண்டும்.

- நன்கொடை அளிக்கப்பட்டு ஒரு வருடத்திற்குள் இச் செயற்பாடு முற்றுப்பெற வேண்டும்

- முன்னைய வருடங்களில் இந்த திட்டத்தால் உதவி வழங்கப்படாத தாபனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## எவ்வகையான செயற்பாடுகள் உதவிபெற முடியாதவை?

**சிறு நன்கொடை நிதி உதவி அளிக்க முடியாதவை:** ஆராய்ச்சி திட்டங்கள் வழமையான கல்விப் பயிற்சி திட்டங்கள், நடவடிக்கை திட்டங்கள், அடிப்படை சேவைகள், தாபனத்திற்கான அவசியமான உதவி (உபகரணங்கள் போன்றவை), புலமைப்பரிசில், கல்வித்திட்டங்கள், தனிப்பட்டோர் தங்களுக்காக விண்ணப்பிப்பது, அல்லது சட்ட வரம்பிற்குட்படாத தாபனங்கள். முன்னெடுக்கப்படும் திட்டங்கள் உலகவங்கியின் வழமையான திட்டங்களுக்கு முரணானதாகவோ அல்லது அதற்கு பதிலாகவோ இருக்க கூடாது. உலக வங்கியின் வழமையான திட்டங்களிலிருந்து வேறுபட்டிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பிட்ட வகைகளில், கீழே காணப்படும் பொருட்களும் விடயங்களும் தகுதி பெற முடியாதனவையாகும்.

- நேரடி சேவை அளிப்பு
- வைத்திய உபகரணங்கள் அதாவது செவிப்புல உபகரணங்கள் ஊன்றுகோல் போன்ற வைத்தியசாலை உபகரணங்கள்
- கணணி உபகரணமும் அதை அமைத்தலும்.
- நிறுவன செலவு அதாவது வாடகை, பராமரித்தல் அல்லது பொது அலுவலக அளிப்புகள்
- வர்த்தக திறன் மேம்பாடு வேலையற்றோர் HIV / AIDS விழிப்புணர்வு போன்றவற்றிற்கான கருத்தரங்கு – அடிப்படை குடியியல் விவகாரக் குறிக்கோள் இல்லாதவிடத்து
- CSO இன் திறனைக் கட்டி எழுப்புவதன் மூலம் வங்கியின் திட்டங்களின் ஆலோசகர்களாகவும் / பணியாட்களாகவும் கடமை புரியலாம்.

- அடிப்படைத் தேவைகளை அடைபவனாக இருத்தல் அதாவது நீர், உணவு, வெப்பம்.
- நூலகங்கள் அல்லது மலசலகூட வசதிகளை நிர்மாணித்தல்

- தொழில் அல்லது வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தல்
- நோய்த் தடுப்புத் திட்டம்.
- உணவு உதவி
- முழுநேர ஊதியம் (உ+ம்) அரசசார்பற்ற நிறுவன இயக்குனரின்
- உட்கட்டமைப்புத்திட்டங்கள் அதாவது நீர் திட்டங்கள், கிணறுகள்.

## நன்கொடைக்கு தெரிவாவதற்கான நிபந்தனைகள்

கீழே காணப்படுபவை நன்கொடை வழங்குவதற்கான பிரதான நிபந்தனைகளாம்.

- **பயனுறுதி:** மேற்கொள்ளப்படவிருக்கும் குடியியல் விவகாரங்களின் நோக்கத்தை அடைய முடியுமா? குறிப்பாக திட்டம் மக்களுக்காக உதவி அளிக்கிறதா, தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது குழுக்களுக்கோ. அத்துடன் இத்திட்டம் பொதுத்துறையுடன் கலந்து பொறுப்புடைமை, பங்குபற்றுதல், உட்படுத்தல் போன்றவற்றை பலமடையச் செய்து அபிவிருத்தி விளைவுகளை உயர்வடையச்செயகிறதா?

- **சாத்தியம்:** மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டம் நடைமுறை சாத்தியமானதா? நிதி ஒதுக்கீடு மற்றும் காலம் போதுமானவையா?

- **தாபனத்தின் திறன்:** எவ்வகையான திறனை தாபனத்தின் ஊழியர்கள் இத்திட்டத்தின் மூலம் வெளிப்படுத்துவர்? அவை இத்திட்டத்திற்கு பொருத்தமானவையா? இது போன்ற சம அளவுத் திட்ட முயற்சிகளில் இத்தாபனம் முன்னர் வெற்றியீட்டி உள்ளதா? தற்போது என்ன விடயத்தை செய்ய இருக்கிறார்கள்?

- **தாபனத்தின் நம்பக்கூடியத் தன்மை:** சமூகத்திடமும் அதற்கப்பாலும் இத்தாபனம் எவ்வகையான நற்பெயரை பெற்றிருக்கின்றது?

- **முக்கியத்துவம்:** இத்திட்டம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவமானதா? மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டம் சமூகத்திற்கு தேவையான விடயங்களை தூண்டும் என்பவற்றுக்கான ஆதாரம் உண்டா? பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வர அல்லது தீர்த்து வைக்க அத்திட்டம் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துமா? இத்திட்டத்திற்கு இப்போது உதவுவதற்கு சரியான தருணமா?

- **சமநிலை:** புவியியல், ஆண் பெண் இனம், போன்ற செயற்பாடுகளின் அடிப்படையில் உலக வங்கியின் இலங்கை அலுவலகம் சமநிலைப்படுத்துவற்கு தெரிவு செய்யலாம்.

## எவ் அளவிலான நன்கொடை வழங்கப்படும்?

அதிகமான நன்கொடைகள் $ 3000 இலிருந்து $ 5000 வரையிலானவை. சிவில் சமூக நிதி ஒரு நடவடிக்கைக்கான உத்தேச நிதிதேவையின் அரைவாசிக்கு மேலாக அரிதாகவே உதவும். அதனால் மற்றைய வளங்களினூடாக கிடைக்கப்பெறும் நிதிக்கு மேலதிக உந்துதலாகவே இந்நிதி அமையும். உலக வங்கியால் கிடைக்கப்பெறும் நன்கொடை எப்படி உதவி வழங்குனர்களிடமிருந்து பொருத்தமான நிதியை பெற உதவும் என்பதை விண்ணப்பிக்கும் தாபனங்கள் விபரிக்கும்படி வேண்டப்படுவார்.

## நன்கொடைக்கு எப்படி விண்ணப்பிப்பது?

சிவில் சமூக நிதி உலக வங்கியின் இலங்கை அலுவலகத்தால் நிருவகிக்கப்படுகிறது விண்ணப்பங்கள் கோருவதும், தீர்மானம் எடுப்பதும் வருடத்தில் ஒருமுறை மட்டுமே நடைபெறும்.

உலக வங்கியின் இலங்கை அலுவலகத்தால் கூட்டப்பட்ட CSF குழுவினரால் நன்கொடை வழங்கப்படுகிறது. விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு அவை குறிப்பிட்ட நோக்கங்களை அடையக்கூடியவையா என தீர்மனிக்கப்படும். எல்லா விண்ணப்பத்திட்டங்களையும் சிவில் சமூக நிதி முழுக்கவனத்திற்கு எடுக்கும். இப்பரிசீலனை முடிவடைய நான்கு மாதம் எடுக்கலாம்.

வழிகாட்டல் நிபந்தனைகள் சிவில் சமூக நிதிக்கான விண்ணப்பங்கள் மற்றும் “திட்டங்கள் வரைவதற்கான வழிமுறைகள்” எனும் ஆங்கிலம், சிங்களம், தமிழ் மூலமான சிறிய புத்தகத்தை உலகவங்கியின் கொழும்பு அலுவலகம் 73/5, காலி வீதி, கொழும்பு 03 எனும் விலாசத்திலுள்ள வரவேற்பு பீடத்திலும் எங்கள் இணையத்தளம் www.worldbank.lk இலும் பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் மூலமாகவோ அல்லது மின் அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள மேலே குறிப்பிட்ட விலாசத்தில் திருமதி கெரிமா திலகசேனவை தொடர்பு கொள்ளலாம், அல்லது மின் அஞ்சல் - kthilakasena@worldbank.org மூலமாகவோ தொலைபேசி இல - 5561318 மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம். அல்லது டிலினிகா பீரிஸ் அவர்களையும் dpeiris@worldbank.org மூலமாகவோ தொலைபேசி இல 5561325 மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.

பங்குபற்றும் நாட்டின் அலுவலகத்திற்கு விண்ணப்பங்களை சமர்ப்பிப்தற்கு முன் நிபந்தனைகளையும் விண்ணப்படிவத்தையும் கவனமாக வாசிக்கும்படி விண்ணப்பதாரிகளுக்கு அறிவுரை வழங்கப்படுகிறது.

அதிக அளவான வேண்டுகோள் உள்ளபடியால், நன்கொடை பெறுபவர்கள் உலக வங்கியின் அலுவலகத்திற்கு நேரடி வருகை, தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தல் விரும்பத்தக்கவல்ல.

CSO பற்றிய மேலதிக தகவல்களை உலகவங்கியின் இணையத்தளமான www.worldbank.lk இல் பெற்றுக்கொள்ளலாம்.